# Sepsis In Pregnancy
# பேரு கால நோய்பூசச்சி  தாக்கல்

ஒரு பெண் கருவுற்றிருக்கும்போது பொதுவாகவே எந்த நோயையும் தடுக்கும் சக்தி சற்று குறைவாக இருக்கும். அதுவும் குழந்தை பிறந்தபின் நஞ்சு பிரியும்போது அது ஒட்டியிருந்த இடம் ஒரு ரணமாக இருக்கும். அத்துடன் குழந்தைக்கு உணவூட்டிய ரத்த குழாய்கள் திறந்து இருக்கும் . அதன் வழியே கிருமிகள் சுலபமாக எல்லா  இடங்களுக்கும் பரவ வாய்ப்பு ஏற்படும். தாயின் உடலிலேயே இருக்கும் சாதாரண கிருமிகள் கூட நோயை உண்டாக்கும் சக்திபெறும். அத்துடன் வெளியிலிருந்து பரவிய கிருமிகளும் சேர்ந்து கர்ப்பப்பையின் உள் பகுதி, அதன் தசை, கர்ப்பப்பையை சுற்றியுள்ள இடங்கள்  எல்லா  இடத்தையும் இந்த கிருமிகள் பற்றிக்கொள்ளும். குழந்தைப்பேரின்போது ஏற்படும் ரத்தப்போக்கு அதிகமாக இருந்தாலோ, அல்லது குழந்தைபிறக்க மிகஅதிகமான நேரம் எடுத்து பிறக்க தாமதம் ஆனாலோ அல்லது நீர்கூடம் உடைந்து வெகு நேரம் ஆனாலோ இந்த தொற்றுநோய் தாக்கம் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். கிருமிகளின் வேகம் அதிகமாகும்போது தாயின் எல்லா  உறுப்புகளையும் பாதித்து சீழ் பிடித்து உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும் நிலை ஏற்படலாம். எனவே அதை தடுப்பது மிக மிக முக்கியம். குழந்தைப்பேறின்போது ஏற்படும் தாயின் உயிரிழப்பிற்கு இந்த தொற்றுநோய் தாக்கம்  ஓர் முக்கிய காரணம் .

## இந்த நோய்பூசச்சிதாக்கல் யாருக்கு ஏற்படும்?

கர்ப்பகாலத்தில் மிகவும் பலஹீனமாக இருந்தாலும் ரத்தசோகை இருந்தாலும், வெகு நேரம் அதாவது அளவுக்கு அதிகமான நேரம் பிரசவ வலி இருந்து, குழந்தை பிறக்க தாமதம் ஆனாலும், நீர்கூடம் உடைந்து பல நாட்கள் ஆனாலும் தொற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு அதிகமாகும். குழந்தை பிறக்கும்போது, சுகாதாரம் இல்லாத முறைகளை கையாளுவது மற்றொரு முக்கிய காரணம் .

## நோய்பூசச்சிநோய் தாக்கல் ஏற்பட்டுள்ளது என்று ஒரு தாய் எப்படி அறியமுடியும்?

தாய்க்கு பல அறிகுறிகள் தெரியும் . முதன் முதலாக காய்ச்சல் ஏற்படும், அடிவயிற்றில் வலி உண்டாகும், அத்துடன் ரத்தப்போக்குடன் துர்நாற்றமும் ஏற்படும். உடல் வலி, தலை வலி,  நெஞ்சில் படபடப்பு போன்ற அறிகுறிகள் ஏற்படும். பசி இறுக்காது, பலஹீனம் உடல் நலமில்லாத உணர்வு ஏற்படும்.. இந்த அறிகுறிகள் குழந்தை பிறந்ததிலிருந்து 3-4 வாரம் வரை எப்போது வேண்டுமானாலும் ஏற்படலாம். எப்போது ஏற்பட்டாலும் இவை தொற்றுநோய் தாக்கலின்  அறிகுறிகள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.இந்த அறிகுறிகள் இருந்தாலும்,  சிறு சந்தேகம் இருந்தாலும், நீர்க்கசிவு

ஏற்படுவதுபோல் சந்தேகம் ஏற்பட்டாலும் உடனே மருத்துவரை அணுகவேண்டும். இந்த வியாதியை உடனுக்குடன் மருந்துகொடுத்து நிலைமையை கட்டுப்படுத்துவது மிக அவசியம். அப்படி உடனே சிகிச்சை ஆரம்பித்தால் விரைவில் குணப்படுத்த முடியும்.

## **காலம் தாழ்த்துவதின் அபாயம் என்ன** ?

நோய் தாக்குவதை உடனே சிகிச்சை அளிக்காவிடில் பல பிரச்சனைகள் உண்டாகும். முக்கியமாக, நோய் பல இடங்களுக்கு பரவும். கர்ப்பப்பை சுருங்காமல் பெரிதாக இருப்பதுடன் தொட்டால் வலிக்கவும் செய்யும் . முக்கிய உறுப்புகள் பாதிக்கப்பட்டு நோய் குணப்படுத்தும் முயற்சிகள் கடினமாகும். மருந்துகளுக்கு நோய்ப்பூச்சிகள் கட்டுப்படாமல் போகும். தொடர்ந்து நிலைமை மோசமாகி முக்கிய உறுப்புகள் வேலை செய்ய இயலாமல் வலுவிழக்கும் . இதை ஆங்கிலத்தில் “செப்டிக் ஷாக்” என்று கூறுவார்கள் . இந்த நிலைமை ஏற்பட்டால் தாயின் உயிரை காப்பாற்ற இயலாமல் போகும்.

## **இந்த நோய்தாக்கல் ஏற்படாமல் இருக்க ஒரு தாய் என்ன செய்யவேண்டும்** ?

இந்த அறிகுறிகளை கவனமாக பார்த்துக்கொள்ளவேண்டும் . ரத்தப்போக்கின் மாற்று துணியை அடிக்கடி மாற்றிக்கொள்ளவேண்டும். வொவ்வொருமுறை சிறுநீர் கழியும் போதும், மலம் கழிக்கும்போதும் வெந்நீர் ஊற்றி சுத்தமாக கழுவிக்கொள்ளவேண்டும்.

போதுமான அளவு நீராகாரம் ( தண்ணீர் , பழரசம், நீர்மோர், பால் ) எடுத்துக்கொள்ளவேண்டும். குழந்தை பிறந்தவுடன் தண்ணீர் அதிகம் குடித்தால் சீழ் பிடிக்கும் என்பது வதந்தி. கட்டாயம் அது உண்மை அல்ல. நீராகாரம் அதிகமாக எடுத்துகொண்டால் , குழந்தைக்கு பாலும் அதிகம் சுரக்கும் தொற்றுநோய் தாக்கலும் வராமல் பாதுகாக்கும். சத்துள்ள உணவும் சுத்தமான காற்றும் மிக அவசியம்.

ஒரு தாய் குழந்தை பிறந்தபின் அதிகநேரம் படுத்திருப்பது நல்லதல்ல. தாய் அசையாமல் படுக்கவேண்டும் இல்லையெனில் கருப்பைக்குள் காத்து புகுந்துகொள்ளும் என்பது மிகப்பெரிய வதந்தி. இப்படி அசையாமல் இருப்பதால், ரத்தக்குழாயில் ரத்தக்கட்டு ஏற்பட்டு, தாயின் உயிருக்கு மிகுந்த ஆபத்தை ஏற்படுத்தும். எதிர்பாராத விதமாக தாயின் உயிர் பிரிய இது ஒரு முக்கியகாரணம்.

## **இந்த வியாதியை தடுக்க மருத்துவர்கள் என்ன முயற்சிகள் எடுப்பார்கள்**?

இந்த நோய் வராமல் இருக்க, பல தடுக்கு முறைகளை கையாளுவார்கள். உள் பரிசோதனை செய்ய கைக்கு சுத்தமான கையுறை அணிவார்கள். சந்தேகம் இருந்தால், பல ரத்த பரிசோதனைகள் செய்து
தொற்றுநோய்களின் அறிகுறிகளை பரிசோதித்து தேவையான தடுப்பு மருந்துகளை உடனடியாக ஊசிவழியாக ரத்தத்தில் செலுத்துவார்கள். உங்களுக்கு நீர்க்கசிவு ஏற்பட்டு நேரம் அதிகமானாலும் குழந்தை பிறக்க தாமதம் ஏற்பட்டாலும், அறுவை சிகிச்சை செய்யவேண்டி இருந்தாலும், முன்எச்சரிக்கையாக தடுப்பு மருந்தை ஆரம்பித்துவிடுவார்கள். வியாதியை வராமல் தடுப்பதும் அறிகுறிகள் இருந்தால் உடனடி மருத்துவம் துவங்குவதும் தான் இந்த நோயினால் வரும் ஆபத்துகளை தவிர்க்க உதவும் முறைகள்.

## **குழந்தை பிறந்தபின் காய்ச்சல் வர வேறு காரணங்கள் உண்டா** ?

பல வேறு காரணங்கள் உள்ளன. சுலபமான காரணம் உடலுக்கு தேவையான நீர் உணவு பத்தாமல் உடல் காய்ந்துபோவது. அதனாலதான் நீர் உணவு அதிகம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

பால் கொடுக்கும் தாய்க்கு பால் கட்டினாலும் காய்ச்சல் வரலாம். குழந்தைக்கு பால் கொடுத்தோ அல்லது, பால் அதிகம் இருந்தால் பாலை வெளிப்படுத்தினலோ காய்ச்சல் குறையலாம். குறையாமல் தொடர்ந்து காய்ச்சல் இருந்தால், மார்பகத்தில் தொற்றுநோய் தாக்கியிருக்கலாம் . அல்லது, சிறுநீரகத்தில் தொற்றுநோய் தாக்கியிருக்கலாம். அறுவை சிகிச்சை செய்திருந்தாலோ அல்லது குழந்தை பிறந்த இடத்தில் தையல் போட்டிருந்தாலோ, அதன் வழி தொற்றுநோய் பரவியிருக்கலாம்.

காரணம் எதுவாக இருந்தாலும், காய்ச்சல், வலி, துர்நாற்றம் பலஹீனம் அல்லது உடல் நலமில்லாத உணர்வு போன்ற அறிகுறிகள் இருந்தால் காலதாமதம் இல்லாமல் உடனடியாக மருத்துவரை அணுகுவது மிக மிக முக்கியம்.